Information and translation provided in good faith and correct at time of reviewing

Regional Anaesthetic for Caesarean Section Information Card

سوانی مرضیات بے ہوش کرنے والا ادارہ

# பகுதிக்கான மயக்கமருந்து சிசேரியன் செக்சனுக்கானது (சிஎஸ்) - தகவல் அட்டை

பகுதிக்கான மயக்க மருந்து என்பது (தண்டுவடம் அல்லது முதுகுத்தண்டில் அளிக்கப்படும் மயக்கமருந்து) ஒரு வகையான வலி நிவாரணி ஆகும்; உங்களின் கீழ்முதுகில் பகுதி மயக்கமருந்தை ஊசி மூலம் அளிப்பதன் வாயிலாக நெஞ்சுப்பகுதிக்கு கீழே உள்ள உடற்பகுதிகளை முழுவதும் மரத்துப் போகச் செய்யும். உங்கள் கால்களும் கூட மரத்துப் போகும் என்பதுடன் உங்கள் நகர முடியாது. மயக்க மருந்தின் தாக்கம் முழுவதுமாக செயல்பட பொதுவாக 10 முதல் 20 நிமிடங்கள் பிடிக்கும்.

## மயக்க மருந்தை அளிப்பதற்காக தயார் செய்தல்

- முதலில், உங்கள் கையில் அல்லது புஜத்தில் வைக்கப்படும் நரம்புவழி வடிகுழாய் எனப்படும் ஒரு ஊசி மூலம் சொட்டுமருந்து அளிப்பான் (டிரிப்) ஒன்று இணைக்கப்படும்.
- மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர் ஒருவர் பகுதி மயக்க மருந்தை உங்கள் முதுகின் கீழ்ப்பகுதிக்குள் ஊசி மூலம் செலுத்துவார்.
- உங்கள் சிறுநீர்ப்பையிலிருப்பதை வெளியேற்றுவதற்காக கதீட்டர் எனப்படும் குழாய் ஒன்று அதனுள் செலுத்தப்படும்.
- உங்கள் இரத்த அழுத்தமும் பிராணவாயு நிலைகளும் அடிக்கடி சரிபார்க்கப்படும்.

பிரசவத்தின் போது உங்களுடன் இருக்கப்போகிறவரை இந்த செயல்முறையின் போது உடனிருக்க சில மருத்துவமனைகள் அனுமதிக்கும், ஆனால் மற்றவை அவரை அல்லது அவளை பிறகு வரவே அனுமதிக்கும்.

## பகுதிக்கான மயக்கமருந்தின் அனுகூலங்கள்

உங்களுக்கு சிசேரியன் செக்சன் செய்யப்பட வேண்டுமென்றால், அதற்கான மிகப்

பாதுகாப்பான வழி இதுதான். பிள்ளைப் பேற்றின் போது உங்களை விழித்திருக்க வைத்திருக்கும் என்பதுடன், முழு உடலுக்கான மயக்கமருந்து எடுத்துக் கொண்ட பின் ஏற்படும் வலி நிவாரணத்தை விட பகுதிக்கான மயக்க மருந்துடன் ஏற்படும் வலி நிவாரணம் மேலும் சிறப்பானது.

## பகுதிக்கான மயக்கமருந்தினால் ஏற்படச் சாத்தியமுள்ள பிரச்சனைகள்

- அறுவைசிகிச்சை தொடங்கும் முன், நீங்கள் உணர்ச்சியற்ற நிலையில் இருக்கிறீர்கள் என்பதை மயக்கமருந்தளிக்கும் மருத்துவர் பரிசோதித்து உறுதிசெய்து கொள்வார். இந்தப் பரிசோதனைகள் 100% நம்பக்கூடியவை அல்ல என்பதுடன், அறுவைசிகிச்சையின் போது நீங்கள் விரும்பத்தகாத உணர்வுகளை அனுபவிக்கக்கூடும்.

- உங்கள் வயிற்றினுள் இழுப்பது மற்றும் தள்ளுவது போன்ற உணர்வுகள் ஏற்படக்கூடும், அதைக் கண்டு நீங்கள் கலங்கக்கூடாது. சில சமயம் ஒரு லேசான வலி தோன்றக்கூடும்; அதற்கு சிகிச்சையளிக்க டிரிப் மூலம் வலிநிவாரணி அளிக்கப்படலாம், அல்லது முகமூடி அல்லது வாய்வழிக் கருவி மூலம் மூச்சிழுக்கப்படலாம். எப்பொழுதாவது கடுமையான வலியை நீங்கள் உணரக்கூடும். இது நிகழ்ந்தால், மருத்துவர் உடனடியாக உங்களுக்கு உடல் முழுமைக்குமான மயக்க மருந்து அளிக்கக்கூடும். இது உங்களைத் தூங்க வைக்கும்.

- மயக்க மருந்து பொதுவாக உங்கள் இரத்த அழுத்தத்தை குறைக்கும். இதன் காரணமாக உங்களுக்கு சுகமில்லாமல் போகலாம் அல்லது மயக்கம் ஏற்படலாம். இது நிகழ்ந்தால், உடனடியாக சிகிச்சையளிக்க உங்கள் மருத்துவர் உங்களுக்கு மருந்து அளிப்பார். சில சமயம், இந்த அறிகுறிகள் உங்களுக்குத் தோன்றுவதற்கு முன்பாகவே மருந்து கொடுக்கப்படும்.

| பகுதி மயக்க மருந்தின் அபாயங்கள் மற்றும் பக்கவிளைவுகள் | |
|---|---|
| சாத்தியமான பிரச்சினை | இந்தப் பிரச்சினை எவ்வளவு பொதுவானது |
| அரிப்பு | பொதுவானது - 3 முதல் 10 நபர்களில் சுமார் 1 நபருக்கு ஏற்படும்,<br>மருந்து மற்றும் மருந்தளவைப் பொறுத்து |
| இரத்த அழுத்தத்தில் குறிப்பிடத்தக்க குறைவு | முதுகுத்தண்டு:<br>பொதுவானது - சுமார் 5இல் 1<br><br>வால்பகுதி தண்டுவடம்:<br>எப்பொழுதாவது - 50இல் சுமார் 1 |
| பிள்ளைப்பேற்றின் போது தண்டுவடத்தில் கொடுக்கப்பட்ட மயக்கமருந்து சிறப்பாகச் செயல்படவில்லை அதனால் அதன் அளவை உயர்த்துவதை விட, சிசேரியன் செக்சன் செய்ய மற்றொரு மயக்க மருந்து அளித்தல்<br><br>மயக்க மருந்து போதுமான அளவு சரியாக செயல்படவில்லை, அறுவை சிகிச்சையின் போது வலிக்கு உதவ மேலும் சில மருந்துகள் தேவை<br><br>சிசேரியன் செக்சன் செயல்பாட்டுக்கு பகுதிக்கான மயக்க மருந்து போதவில்லை, முழு உடல் மயக்க மருந்து தேவைப்படுகிறது | பொதுவானது - சுமார் 8 முதல் 10இல் 1<br><br>முதுகுத்தண்டு:<br>எப்பொழுதாவது - 20இல் சுமார் 1<br>வால்பகுதி தண்டுவடம்:<br>பொதுவானது - சுமார் 7இல் 1<br><br>முதுகுத்தண்டு:<br>எப்பொழுதாவது - 50இல் சுமார் 1<br>வால்பகுதி தண்டுவடம்:<br>எப்பொழுதாவது - 20இல் சுமார் 1 |
| கடுமையான தலைவலி | வால்பகுதி தண்டுவடம்:<br>பொதுவானது அல்ல - சுமார் 100இல் 1<br>முதுகுத்தண்டு:<br>பொதுவானது அல்ல - சுமார் 500இல் 1 |
| நரம்பு பாதிப்பு<br>(உதாரணமாக, கால் அல்லது பாதத்தில் உணர்விழந்த பகுதி, கால் பலவீனம்) | விளைவுகள் ஆறு மாதத்துக்குக் குறைவான காலம் நீடிக்கும்:<br>ஓரளவு அரிது - சுமார் 1,000 முதல் 2,000இல் 1<br><br>விளைவுகள் ஆறு மாதத்துக்கு மேலான காலம் நீடிக்கும்: அரிது - சுமார் 24,000இல் 1 |
| மெனிஞ்சைடிஸ் (மூளைக்காய்ச்சல்) | மிக அரிது - சுமார் 100,000இல் 1 |
| முதுகுத்தண்டு அல்லது தண்டுவடத்தில் மயக்கமருந்து அளிக்கப்பட்ட இடத்தில்<br>முதுகுத்தண்டு கட்டி (தொற்று)<br><br>முதுகுத்தண்டு அல்லது தண்டுவடத்தில் மயக்கமருந்து அளீக்கப்பட்ட இடத்தில் இரத்தக்கட்டு (ஹிமடோமா)<br><br>கட்டி அல்லது இரத்தக்கட்டு கடுமையான காயத்தை விளைவிக்கும், பக்கவாதம் (கீழங்கவாதம்) உள்பட | மிக அரிது - சுமார் 50,000இல் 1<br><br>மிக அரிது - சுமார் 168,000இல் 1<br><br>மிக அரிது - சுமார் 100,000இல் 1 |

| | |
|---|---|
| தண்டுவடத்துடன்: | |
| முதுகுத்தண்டிலுள்ள நரம்பில் பெரிய அளவிலான பகுதி மயக்கமருந்து தவறுதலாக உட்செலுத்தப்படுதல் | மிக அரிது - சுமார் 100,000இல் 1 |
| முதுகுத்தண்டு திரவத்தினுள் பெரிய அளவிலான பகுதி மயக்கமருந்து தவறுதலாக உட்செலுத்தப்படுதல், இதன் காரணமாக சுவாசத்தில் சிரமம் மற்றும் மிக அரிதாக சுயநினைவிழப்பு ஏற்படக்கூடும் | ஓரளவு அரிது - சுமார் 2,000இல் 1 |

இந்த அபாயங்கள் மற்றும் பக்க விளைவுகள் எல்லாவற்றுக்குமான துல்லியமான தரவுகள் கிடைக்கவில்லை. இந்த தரவுகள் தோராயமானவை மற்றும் ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொன்றுக்கு வேறுபடும்.

இந்த அட்டை ஒரு சுருக்கம் ஆகும். www.labourpains.com என்ற வலைத்தளத்தில் மேலும் விவரங்களைக் காணலாம்

உங்களுக்கு இது குறித்து கவலை ஏதுமிருந்தால், உங்களுக்கு மயக்க மருந்தளிக்கும் மருத்துவருடன் தயவுசெய்து பேசவும்.

OAAவுக்காக இதை மொழிபெயர்த்தளித்த Translators without Borders என்ற தொண்டு நிறுவனத்துக்கு எங்கள் நன்றி.

© Obstetric Anaesthetists' Association 2012

Registered Charity No 1111382

www.labourpains.com